**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 31 of 2024

Depositions of PW -5 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சிதம்பரம்

Father's Name : நாச்சிமுத்துகவுண்டர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of February** 2026.

**(1-3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் கோவை மாவட்டம் சூலூர் தாலுகா பூராண்டாம் பாளையம் வடக்கு தோட்டத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பூராண்டாம் பாளையத்தில் உள்ள எனக்கு சொந்தமான கட்டிடத்தில் டாஸ்மாக் மதுபானக் கடை உள்ளது. கடந்த 08.07.2023 ஆம் தேதி காலை நேரம் ஞாபகம் இல்லை நான் எனது தோட்டத்திற்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்த பொழுது டாஸ்மாக் கடையில் முன்பக்க பூட்டு உடைக்கப்பட்டு ஷட்டர் திறந்த நிலையில் இருந்தது. உடனடியாக நான் டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசர் பாலசுப்பிரமணியத்திற்கு தகவல் சொன்னேன்.

2. பாலசுப்ரமணியம் கடைக்கு வந்து பார்த்துவிட்டு உடனே இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னார். பின்னர் மறுநாள் காலை நான் வழக்கம்போல் எனது

தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்த பொழுது தோட்டத்தில் கம்பி ஒன்று கிடந்தது. உடனடியாக இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் தகவல் சொன்னேன். மேற்படி நாங்கள் ஆஜர் செய்த கம்பியை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார்கள் அதில் நானும் இளையராஜாவும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் தற்பொழுது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கம்பி நான் போலீசாரிடம் ஒப்படைத்தேன். **P .M.O**.2 குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் **EX**.**P**3 ஆக குறியீடு செய்யப்படுகிறது . படிவம் 91 இல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் படிவம் 91 **EX**.**P**4 ஆக குறியீடு செய்யப்படுகிறது .போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 , 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறேன் என்றால் சரிதான் .ஆகவே என்னால் அதிக அளவில் வெளியே செல்ல இயலாது என்றால் சரிதான் யாரேனும் அழைத்துச் சென்றால் செல்வதுண்டு. எனக்கு சொந்தமாக 2 ஏக்கர் தென்னந்தோப்பு உள்ளது. நான் தோட்டத்திற்கு அவ்வப்போது செல்வேன். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் நிலையில் நான் எவ்வாறு சம்பவ இடம் சென்று இருப்பேன் என்றால் நான் தினமும் காலை சிறிது தூரம் நடந்து செல்வது வழக்கம் ஆகவே அன்றைய தினமும் சென்று இருந்தேன். நான் டாஸ்மாக் கடையில் பார்வையிட்ட பொழுது பூட்டு உடைக்கப்பட்டு பூட்டு அங்கேயே இருந்தது என்றால் சரிதான் பூட்டு உடைக்க பயன்படுத்தப்பட்ட கற்கள் சம்பவ இடத்தில் இருந்தது என்றால் சரிதான். நான் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்த பொழுது கம்பி இருந்ததாகவும் மேற்படி கம்பியால் தான் டாஸ்மாக்கின் பூட்டை உடைத்து இருப்பார்கள் என நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் பூட்டு கொண்டு சென்று ஆதார் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு தகவல் சொல்லி அவர்தான் முதலாவதாக சம்பவ இட்ம் வந்தார் என்றால் சரிதான். பாலசுப்ரமணியம் சம்பவ இடம் வந்து உள்ளே சென்று பார்வையிட்டார் என்றால் சரியல்ல போலீசாரை அழைத்தார். போலீசார் சம்பவ இடம் வந்ததும் போலீசார் உடன் பாலசுப்பிரமணியமும் கடை உள்ளே சென்று பார்வையிட்டார் என்றால் சரிதான்.பாலசுப்பிரமணியம் மற்றும் போலீசார் கடையின் உள்ளே சென்று பார்த்துவிட்டு வெளியே வந்து என்னிடம் என்ன சொன்னார்கள் என்றால் கடையில் இருந்த பாட்டில்கள் காணாமல் போய் இருப்பதாக தெரிவித்தார்கள். அதன் பெயர் அளவுகள் குறித்து சொல்ல வில்லை. கடையில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் கடையின் முன்புறம் மட்டும் ஒரு சிசிடிவி கேமரா இருந்தது தற்போது நிறைய கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. பாலசுப்ரமணியம் தகவல் சொல்லி மேலாளர் நடேசன் சம்பவ இடம் வந்தாரா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. எனது கடையில்தான் டாஸ்மாக் அமைந்துள்ளது என்பதை காண்பிப்பதற்கு நான் போலீசாரிடம்

ஏதேனும் ஆவணங்கள் கொடுத்தார்களா என்றால் அவ்வாறு எந்த ஆவணங்களும் கொடுக்கவில்ல. பாலசுப்பிரமணியம் போலீசருக்கு தகவல் சொல்லி சுமார் 45 நிமிடத்திற்குள் போலீசார் சம்பவ இடம் வந்தார்கள். நான் சொல்வது போல் நான் அன்றைய தினம் அவ்வழியாக செல்லவில்லை என்றும் என்னுடைய இடத்தில் டாஸ்மாக் அமைந்துள்ளதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நடக்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கும் டாஸ்மாக் இருக்கும் இடத்திற்கும் சுமார் 300 மீட்டர் இருக்கும்.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசாரிடம் சொன்ன விபரத்தை தான் தற்பொழுது நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்கிறேன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என் முன்பாக உள்ள சான்று பொருள் வெளிச்சந்தையில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். மேற்படி P.M.O.2 சான்று பொருளை நான்தான் காவல் நிலையம் கொண்டு சென்று ஆஜர் செய்தேன். திருட்டு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் P.M.O.2 அகலம், நீளம் குறிப்பிட்டு சொல்லவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நடக்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் EX.P3 AND eX.P4 படித்து பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.19 19:01:43 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**